1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கோவில்களெல்லாம், அணிமணிகளெல்லாம் வண்ணப்படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு கோவில்கள் பாக்கி இருக்கின்றன. அவைகள் எடுக்கப்பட்ட பிறகு இந்தப் படங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை பரிசீலனை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

* 233 Q.—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to produce a film on the preparation of wheat products: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழக அரசு செய்தி படம் எண் 16 பஞ்ச நிவாரணமும் (Drought Relief) கோதுமை உணவு தயாரிப்பது எப்படி என்பது பற்றியும் சேர்த்து படம் எடுக்கப்பட்டு, 10–10–1969ல் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: சார், நமது சர்க்கார் எடுக்கிற படங்கள், நியூஸ் ரீல் ஆயினும் சரி, அல்லது டாக்குமென்டரி பில்ம் ஆயினும் சரி இவைகள் எல்லாம் பெரும்பாலும் கட்சிப் பிரசாரப் படங்களாக இருக்கின்றன என்று பொதுமக்கள் சொல்கிறார்களே, இது உண்மையா? ஆகையால் இந்தப் படங்களை எடுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர் அவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்து அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இந்தப் படங்களை எடுக்கிற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா? அல்லது அரசாங்கமே முடிவு செய்கிறார்களா என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர்களின் உருவங்கள் அதில் தெரிகிற காரணத்தாலே அது கட்சிப் பிரச்சாரம் ஆகாது. எந்தக் கட்சியின் அடிப்படையிலும் எடுக்கப்படவில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட பல்வேறு விழாக்கள் அந்தப் படங்கள் இன்றைய தினம் வெளியிடப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதி சங்கர தீட்சிதர் அவர்களுடைய பிறந்த நாள் விழா படம் கூட வெளியிடப்பட்டிருக்கிறது. மற்றும் பல் வேறு கட்சித் தலைவர்கள் பிறந்த நாள் விழாக்கள் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தனிப்பட்ட முறையிலே எந்தக் கட்சியைச் சேர்ந்த படங்களும் எடுக்கப்படவில்லை. பொதுவாக அரசாங்கப் பணிகள் படங்களாக இருக்கிற காரணத்தால் அமைச்சர்களை அடிக்கடிப் பார்க்க நேரிடுகிற காரணத்தால் ஒருவேளை விநாயகம் அவர்களுக்குக் கட்சிப் பிரசாரமாக தெரிகிறது என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் இந்திய தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்.

* 234 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அகில இந்தியத் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எவை எவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தேர்தல் சின்னங்களை ஒதுக்குவதற்காக இந்தியாவின் தேர்தல் கமிஷன் கீழ்க் கண்ட கட்சிகளை அகில இந்திய கட்சிகளாக அங்கீகரித்துள்ளது.

இந்திய தேசிய காங்கிரஸ், சுதந்திரா கட்சி, பாரதிய ஜனசங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சமயுக்த சோஷலிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்), பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. என். எஸ்: வி. சித்தன்: இந்தக் கட்சிகள் எல்லாம் கடந்த பொதுத் தேர்தலில் எத்தனை சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கின்றன என்று கூற முடியுமா? மேலும் தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவா? இந்தக் கட்சிகளுக்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கட்சிகளின் உறுப்பினர் கள் பற்றி அந்தந்தக் கட்சித் தலைவர்களைத்தான் கேட்க வேண்டும். இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், கடந்த பொதுத் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வாக்குகளைப் பெற்ற தனால் தான் அங்கீகரிக்கப்பட்டன. அந்தவகையில் இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விடையளிக்கும்போது, இந்திய தேசிய காங்கிரஸ் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கட்சி இப்போது எங்கே இருக்கிறது? இப்போது சிண்டிகேட், இண்டிகேட் என்று சொல்லிக் கொள்கிறார் களே, அப்படியானால் இந்தக் கட்சி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, அந்தக் கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். இதை நான் ஆட்சேபிக் கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சுருக்கமான பதில்—நீதிமன்றத்தில் இருக்கிறது.

தேர்தல் துறை

* 235 வினா.—திரு. என். எஸ்: வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இம்மாநிலத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் நேரடி மேற் பார்வையின் கீழ் தேர்தல் துறை எதுவும் அமைக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு அரசிடம் இது போன்ற செயற்குறிப்பு இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.